நாமக்கல் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் :திரு.ஆ.கார்த்திகேயன்,M.C.A.,

---

செ.மு.ந.க.எண்.2223/2020/அ2 நாள்: 26.07.2021

பொருள்: பணியமைப்பு - கருவூலம் மற்றும் கணக்குத்துறை – நாமக்கல் மாவட்டக் கருவூல அலகு – திரு.ச.விஜய், இளநிலை உதவியாளர், மாவட்ட கருவூலம், நாமக்கல். என்பவர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் 2018-2019&2019-2020-ஆம் ஆண்டு தொகுதி IV – இன் மூலம் இளநிலை உதவியாளரா தெரிவு - நாமக்கல் மாவட்டக் கருவூல அலகில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1.செயலர்/தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-35 அவர்களின் கடித எண்.2505/PSD-1/2020 நாள்:30.05.2020.
2.ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை சென்னை- 35 அவர்களின் செ.மு.ந.க.எண்.18541/2020/சி3 நாள்:31.07.2020.
3.இவ்வலுவலக செ.மு.ந.க.எண்.2223/2020/அ2 நாள்:10.08.2020.
4.அரசாணை(நிலை)எண்.191 பொதுத்துறை நாள்:01.02.1962
5. இவ்வலுவலக ந.க.எண்.2223/2020/அ2 நாள்:22.10.2020
6. உதவி இயக்குநர், உதவி இயக்குநர் அலுவலகம் அரசு தேர்வுகள் துறை, நாமக்கல்,அவர்களின் ந.க.எண்.000607/A2/2019 நாள்:17.12.2020.

***

பார்வை 1-இல் காணும் கடிதத்தின்படி திரு.ச.விஜய், என்பவர் 2018-2019 & 2019-2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி-IV நேரடி போட்டி தேர்வின் மூலம் இளநிலை உதவியாளராக தெரிவு பெற்று கருவூலம் மற்றும் கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளார்.

பார்வை 2-இல் காணும் செயல்முறை ஆணையின்படி நாமக்கல் மாவட்ட கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தனியர் பார்வை 3-இல் காணும் செயல்முறை ஆணையின்படி 10.08.2020 முற்பகல் முதல் மாவட்டக் கருவூலம் நாமக்கல்லில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 5-இல் காணும் கடிதத்தின்படி தனியருக்கு பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் உண்மை தன்மை கோரி இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து தனியரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மை தன்மை வாய்ந்தவை என பார்வை 6-இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பார்வை 4-இல் காணும் அரசாணையின் படி தனியர் பணியில் சேர்ந்த நாளான 10.08.2020 முற்பகல் முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1.தனியர் பணியேற்ற நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிகாலத்தில் இரண்டாண்டு பணிகாலம் தகுதிகாண் பருவ காலமாக நிர்ணயிக்கப்படுகிறது.

2.தனியர் தகுதிகாண் பருவ காலத்தில் அரசு விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதுடன் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும்.

3.சென்னை உயர்நீதிமன்றம்/சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை ஆகியவற்றில் பணிவரன்முறை மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி- IV 2018-2019 & 2019-2020 தெரிவு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவின்படியும், பின்னாளில் அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு ஏற்ப இவ்வாணை மாறுதலுக்கு உட்பட்டதாகும்.

26/07/24

கருவூல அலுவலர்,
நாமக்கல்.

பெறுநர்
திரு.ச.விஜய்,
இளநிலை உதவியாளர்,
மாவட்டக் கருவூலம், நாமக்கல்.

26/07/2024

நகல்:
1.கூடுதல் கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், நாமக்கல் - மேஜைக்கு.
2.உதவி கருவூல அலுவலர், மாவட்டக் கருவூலம், நாமக்கல் - மேஜைக்கு.
3.இருப்பு கோப்பு அ1/அ2